# அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, அரகண்டநல்லூர்,விழுப்புரம்–605752

குறிப்பாணை எண்: 924 / பி2 /2018 நாள்: 04.06.2018

பொருள்: அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, அரகண்டநல்லூர், விழுப்புரம் 2018-2019 ம் கல்வியாண்டில் நேரடி இரண்டாம் ஆண்டு (Lateral Entry) முழுநேர **தற்காலிகச் சேர்க்கை கலந்தாய்வுக் கூட்டம்** அறிவித்தல் தொடர்பாக - சார்பு.

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2018-2019ம் கல்வியாண்டில் நேரடி இரண்டாம் ஆண்டு (Lateral Entry) முழுநேரப் பட்டயப் படிப்பு மாணவ / மாணவியர் சேர்க்கைக்கான கலந்தாய்வுக் கூட்டத்தில் ( Counseling ) கலந்துகொள்ள செல்வன் / செல்வி: (Rank: இடம் பெற்றுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

இம்மாணவர் 11-06-2018 நாளன்று தவறாமல் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். **இக்குறிப்பிட்ட நாளில் மற்றும் நேரத்தில் வராதவர்கள் கண்டிப்பாக பின்னர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

**இக்கடிதம் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு மட்டுமே. மாணவர் சேர்க்கைக்கான கடிதம் இல்லை** எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மாணவர்கள் +2 மற்றும் ITI வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இனச்சுழற்சி ஆகியவற்றின் அடிப்படையிலேயே வரிசைப்படி ( As per their Rank Based on the Mark and communal rotation ) சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தற்போது அளிக்கப்படும் **சேர்க்கை முற்றிலும் தற்காலிகமானது.** சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்கக ஆணையரின் ஒப்புதல் பெற்ற பின்னரே மாணவர் சேர்க்கை உறுதிப்படுத்தப்படும் என்றும் மாணவர்களது சான்றுகளில் தவறுகள் / குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் எந்நிலையிலும் பயிலகத்தை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**சேர்க்கை பெற்ற மாணவர்கள் கீழ்கண்ட தொகையினை அன்றைய தினமே கட்டாயம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறினால், சேர்க்கை ரத்து செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

| **சேர்க்கைக் கட்டண விவரங்கள்** | | **+2** மாணவர்கள் | **ITI** மாணவர்கள் |
|---|---|---|---|
| சேர்க்கைக் கட்டணம் | : | 2.00 | 2.00 |
| சிறப்புக் கட்டணம் | : | 1000.00 | 1000.00 |
| வளர்ச்சிக் கட்டணம் | : | 1000.00 | 1000.00 |
| வைப்புக் கட்டணம் | : | 50.00 | 50.00 |
| மதிப்பெண் பட்டியல் சரிபார்ப்புக் கட்டணம் ( ஒரு மதிப்பெண் பட்டியலுக்கு ) | : | 50.00 | 200.00 |
| இயக்கக சரிபார்ப்புக் கட்டணம் | : | 15.00 | 15.00 |
| கொடி நாள் | : | 5.00 | 5.00 |
| இந்திய செஞ்சிலுவை சங்கம் உறுப்பினர் கட்டணம் | : | 20.00 | 20.00 |
| **மொத்தம் ரூபாய்** | | **2142.00** | **2292.00** |

**சேர்க்கையின்போது கொண்டுவர வேண்டிய அசல் ( All Originals ) ஆவணங்கள்:**

- 10th மதிப்பெண் பட்டியல் (10th Mark Sheet )
- +2 மதிப்பெண் பட்டியல் (+2 Mark Sheet ) / I.T.I. மதிப்பெண் பட்டியல்
- தற்காலிக மதிப்பெண் பட்டியலில் (+2) தலைமை ஆசிரியரின் சான்றொப்பம் (Attested) பெற்று வர வேண்டும்
- கடைசியாகப் பயின்ற பள்ளி / I.T.I. மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)
- சாதிச் சான்றிதழ் உரிய அதிகாரியின் கையொப்பத்துடன் ( Community Certificate from the concerned Authority (**Permanent Card)** )
- நன்னடத்தைச் சான்றிதழ் ( Conduct Certificate )
- மார்பளவு புகைப்படம் ( Passport size color photos ) – 4Nos.

**நகல்கள் சான்றொப்பத்துடன் (Attested xerox Copies)** ( மேற்குறிப்பிட்ட அனைத்தும் )

| | | |
|---|---|---|
| அனைத்து மதிப்பெண்பட்டியல் | : | 3 எண்கள் (Copies) |
| சாதிச் சான்றிதழ் (Community Certificate) | : | 3 எண்கள் (Copies) |
| மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) | : | 3 எண்கள் (Copies) |
| வங்கி கணக்கு புத்தகம் (Bank Pass Book) | : | 3 எண்கள் (Copies) |
| வருமான சான்றிதழ் (Income Certificate) | : | 3 எண்கள் (Copies) |
| ஆதார் கார்டு (Aadhar Card) | : | 3 எண்கள் (Copies) |
| ரேஷன் கார்டு | : | 3 எண்கள் (Copies) |

**சேர்க்கைக்கு முன்னரே சான்றுகளை தேவையான அளவு நகல் எடுத்துக் கொள்ள வேண்டும்.** அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பதற்காக சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்படுவதால் அவை திரும்ப வரும் வரை **எக்காரணத்தைக்கொண்டும் இடையில் வழங்க இயலாது**. சேர்க்கை பெற்றப்பின் மாணவன் வேறு கல்வி நிலையங்களில் சேர்க்கை பெற விரும்பி பயிலகத்தை விட்டு செல்ல நேர்ந்தால் பயிலகத்தில் **செலுத்திய கட்டணங்கள் கண்டிப்பாக திருப்பித் தரப்படமாட்டாது**.

பெறுநர்:

**இடம் இருந்தால் மட்டுமே சேர்க்கை வழங்கப்படும்**